**19.03.2024 அ.வ.எண்.316/2004 வா.சா.1, நடராஜன் த/பெ. கிருஷ்ணன்**

**குறுக்கு விசாரணை 2,3 பிரதிவாதிகள் தரப்பு**

09.02.2000 தேதியில் என் தந்தை எனக்கும் 1, 2 மற்றும் 4 பிரதிவாதிக்கும் சேர்த்து ஒரு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் அது விவரம் எனக்கு தெரியாது. உயில் படி எனக்கு கிடைத்த சொத்துகளை எச்.டி.எப்.சி வங்கியில் அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளேன் என்றும் அதற்கான ஆவணம்தான் தற்போது என்னிடம் காட்டப்படுவது என்றும் சொன்னால் நான் கடன் வாங்கியது உண்மை ஆனால் உயில் படி சொத்து கிடைத்ததாக சொல்லி கடன் வாங்கவில்லை. எனது அனுபவத்தில் இருந்த சொத்துக்கள் என காட்டி கடன் பெற்றேன். அதற்கான ஆவணம்தான் என்னிடம் காட்டப்படுவது அது பி.வா.சா.ஆ-1. அடமான கடன் ஆவணத்திலேயே என் தந்தை எழுதி வைத்துள்ள உயிலை பற்றி குறிப்பிட்டு அதன் சான்று நகலை நான் வங்கிக்கு ஒப்படைத்ததாக பக்கம் 5-ல் விவரம் உள்ளது என்றால் அது சரிதான். எனவே, உயில் பற்றி எனக்கு நன்கு தெரிந்துதான் உயிலில் பி அட்டவணையில் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்துகளை மட்டும் நான் வங்கியில் அடமானம் வைத்தேன் என்றும் அதே உயிலில் 1, 2 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கும் தனித்தனி அட்டவணையில் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டு முழுமையான பராதீனம் ஏற்பட்டுள்ளதால் நான் பாகபிரிவினை கேட்க முடியாது என்றும் சொன்னால் அது சரியல்ல. பிருதூர் கிராம புல எண்கள்.300/2 மற்றும் 300/3 ஆகியவற்றிற்கு எனக்கு தனி பட்டா வழங்கப்பட்டுள்ளது. உயிலில் கண்டபடி 1-ம் பிரதிவாதிக்கு கிடைத்த சொத்துகளுக்கு அவர் பெயரில் தனி பட்டாவும், 4-ம் பிரதிவாதிக்கு கிடைத்த சொத்துகளுக்கு அவர் பெயரில் தனி பட்டாவும் வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உயிலில் டி அட்டவணையில் எனது தாயாருக்கு சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் தாயாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை அவர் விற்பனை செய்துவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் தாயார் என்னுடன்தான் வசித்தார் என்பது சரிதான். அவ்வாறெனில் என் தாயார் விற்பனை செய்த விவரம் எனக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றும் சொன்னால் அது சரியல்ல. எனது அக்கா 4-ம் பிரதிவாதியின் மகளைத்தான் நான் திருமணம் செய்துள்ளேன் என்பது சரிதான். 4-ம் பிரதிவாதி 13.05.2018 அன்று இறந்துவிட்டார் என்பது சரிதான். 4-ம் பிரதிவாதிக்கு வாரிசு சேர்க்காததால் பாகபிரிவினைக்கான இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்பது சரியல்ல. எனது தாயார் 15.08.2006 அன்று இறந்தார் என்றால் தேதி சரியாக ஞாபகமில்லை அதே தேதியில் என் தாயார் உயில் எழுதியதாக ஒரு ஆவணத்தை 5-ம் பிரதிவாதி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளார் என்றால் என் தாயாருக்கு இறப்பதற்கு 3, 4 நாட்களுக்கு முன்பாக உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனைக்கு அடிக்கடி அழைத்து சென்று வந்தனர் அவர் இறந்த அன்றே உயில் எழுதியிருக்க கூடும். 5-ம் பிரதிவாதி என் மகன்தான். 5-ம் பிரதிவாதி தாக்கல் செய்த உயில் எங்களால் உருவாக்கப்பட்டது என்பது சரியல்ல.

**5-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**